06.04.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வெப்பத்தை தணிக்கும் கிருணிப் பழங்கள்



கோடைக்கால வெப்பத்தைத் தணிக்கும் கிருணிப் பழங்களின் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், விலையும் குறைந்துள்ளது. உடற்சூட்டை தணித்து உடலில் குளிர்ச்சியை ஏற்படுத்தும் தன்மையை கிருணிப்பழங்கள் கொண்டுள்ளன. காஞ்சிபுரம், மதுராந்தகம், உளுந்தூர்பேட்டை, திருத்தணி, கூடுவாஞ்சேரி, திருவண்ணாமலை, வேளச்சேரி, ஆண்டிப்பாக்கம், ஆந்திரத்தில் மதனஹள்ளி, அனந்தப்பூர், நெல்லூர், தடா, மகாராஷ்டிரம், கர்நாடகம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு விவசாயிகளால் பயிரிடப்படுகிறது. அதிக நீர்வளம் கொண்ட ஏரிப்பகுதி, கிணற்றுப்பாசனம் போன்ற விளைநிலங்களில் பயிரிடலாம். அதிக பராமரிப்பு இல்லாத காரணத்தாலும், குறைந்த நாளில் பலனைப் பெறலாம். இப்போது மகசூல் எடுக்கும் பருவம் என்பதால், கிருணிப்பழங்கள் பயிரிடுவதும், வரத்தும்

நாள்தோறும் அதிகரித்து வருவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து மதுராந்தகத்தைச் சேர்ந்த விவசாயி ராஜலிங்கம் கூறியதாவது:-

நீர்ப்பாசனமும், உரத்தன்மையுடன் கூடிய செம்மண் விளைநிலத்தில் பயிரிட்டால் மகசூல் அதிகம் கிடைக்கும். 60 நாள்களில் விளையும் தன்மையுடையது. வளம் நிறைந்த விளைநிலத்தில் ஏக்கருக்கு 20 டன்னும், வளம் சற்றுக் குறைவான விளைநிலத்தில் 15 டன் வரையிலும் மகசூல் கிடைக்கும். ஒவ்வொரு பழமும் குறைந்தது 2 கிலோ முதல் 5 கிலோ எடை கொண்டதாக இருக்கும்.

கடந்த ஆண்டு ஒரு டன்னுக்கு 18 ஆயிரத்துக்கு விற்பனையானது. தற்போதைய நிலையில் வரத்து அதிகரித்துள்ளதால் ஒரு டன் ரூ.12 ஆயிரம் என குறைந்துள்ளது என்றார்.

இதுதொடர்பாக கோயம்பேடு காய்கனி வியாபாரி செப்ந்தர் கூறுகையில்:-

கடந்தாண்டு ஒவ்வொரு நாளும் 15 லோடுகள் வரையில் வரத்துக் குறைவாக இருந்தது. இதனால், விலை அதிகமாக இருந்தது. தக்காளி போன்ற காய்கறிகளின் விலை குறைவால், விவசாயிகள் அதிக அளவில் கிருணிப்பழங்களை பயிரிட்டுள்ளனர். இதனால், 50 லோடுகள் என வரத்து அதிகரித்துள்ளது. எனவே, விலையும் குறைந்துள்ளது என்றார்.

## ஆண்டிபட்டி பகுதியில் எலுமிச்சை விலை வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை

ஆண்டிபட்டி பகுதியில் எலுமிச்சை பழத்தின் விலை வீழ்ச்சியடைந்ததால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி, வருசநாடு, வெள்ளிமலை மற்றும் பல்வேறு பகுதிகளில் எலுமிச்சை பழம் விவசாயம் நடைபெறுகிறது. எலுமிச்சை, மார்ச், எப்ரல், மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் அதிக மகசூல் தரும். அதேநேரம், இந்த மாதங்களில் கோடை வெயில் நிலவுவதால், எலுமிச்சைக்கு கிராக்கி ஏற்பட்டு, கூடுதல் விலை கிடைக்கும்.

ஆனால், கடந்த ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அதிக மழை பெய்ததால், இதன் பூக்கள் அழுகி மகசூல் குறைந்தது.

இதுதவிர, பூச்சி தாக்குதல் ஏற்பட்டு பழங்களில் தழும்பு போன்று காணப்படுகிறது. இதனால், போதிய விலை கிடைக்கவில்லை என விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

இதுகுறித்து, எலுமிச்சை விவசாயி ராமராஜ் கூறுகையில், கடந்தாண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் மூட்டை ரூ. 2 ஆயிரம் வரை விலை போனது. தற்போது, நோய் தாக்குதலால் புள்ளி விழுந்து, மூட்டை ரூ. 1250 வரை மட்டுமே விலை போகிறது. இதனால், போதிய லாபம் கிடைக்காமல் விவசாயிகள் வேதனையடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

## ஏப்.11-இல் வாழை சாகுபடி தொழில்நுட்ப இலவச பயிற்சி

நாமக்கல்லில் வரும் ஏப். 11-ஆம் தேதி வாழை சாகுபடி தொழில்நுட்பம், வாழை நார் பிரித்தெடுக்கும் முறைகள் குறித்து இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இதுகுறித்து நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் என்.அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 11-ஆம் தேதி காலை 9 மணிக்கு வாழை சாகுபடி தொழில்நுட்பம், வாழை நார் பிரித்தெடுக்கும் முறைகள் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இப்பயிற்சி முகாமில் கன்று தேர்வு செய்யும் முறை, நிலத் தயாரிப்பு, சாதாரண, அடர் நடவு செய்யும் முறைகள், அதன் நன்மை, தீமைகள், பயிர் இடைவெளி, சொட்டு நீர்ப்பாசனம், நீர் வழி உரமிடுதல், களை நிர்வாகம், நுண்ணூட்டச்சத்துக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முறைகள், பூச்சி, நோய் நிர்வாகம் குறித்து ஒரு நாள் பயிற்சி விரிவாக நடத்தப்படுகிறது.

இப்பயிற்சி முகாமில் வாழைநாரின் முக்கியத்துவம், வாழை நார் பிரித்தெடுப்பதற்கு மட்டை தேர்வு செய்யும் முறை, இயந்திரம் மூலம் வாழை நார் பிரித்தெடுத்தல், அதன் நன்மைகள், வாழை நாரைப்

பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள், அதிலிருந்து தயார் செய்யப்படும் பொருள்கள் குறித்து விரிவாகப் பயிற்சியளிக்கப்படுகிறது.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள், ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது 04286- 266345, 266650 என்ற தொலைபேசி எண்கள் மூலமாகவோ வரும் 10-ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆத்தூர், கெங்கவல்லி பகுதிகளில் கடலை பயிரில் செம்பேன் தாக்குதல்

ஆத்தூர், கெங்கவல்லி வட்டாரப் பகுதிகளில் கடலை பயிரில் செம்பேன் தாக்குதல் அதிகமாக உள்ளது.

சேலம் மாவட்டம், ஆத்தூர், கெங்கவல்லி வட்டாரப் பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் கடலை பயிரிடப்பட்டுள்ளது. இதில் செம்பேன் தாக்குதல் அதிகமாகக் காணப்படுவதால், இதனைக் கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து ஆத்தூரில் உள்ள தனியார் அரசு அனுமதி பெற்ற வேளாண் மருந்தகம் மற்றும் மண் பரிசோதனை நிலைய வேளாண் ஆலோசகர் எம்.செல்வப்ரியா நம்மிடம் கூறியது,

கடலை பயிர்களில் செம்பேன் தாக்குதலின் அறிகுறிகள்: இலைகளில் வெண்புள்ளிகள் தோன்றி, பின் தாக்கப்பட்ட இலைகள் செம்பழுப்பு மற்றும் வெண்கல நிறமாக மாறும். இதைத் தொடர்ந்து, இலைகள் உதிர்ந்து செடிகள் வாடிவிடும்.

மிக மோசமாக தாக்கப்பட்ட செடிகளில், நூலாம்படைகளால் இலைகள் பின்னப்பட்டு பிறகு உதிர்ந்து விடும். பொதுவாக செம்பேனின் வாழ்நாள் 15 நாள்கள் தான். ஆனால், வெப்பம் அதிகமான காலநிலையில் செம்பேன் தனது வாழ்நாளை ஒரு வாரத்துக்குள் முடித்துக் கொள்ளும். வெப்ப காலநிலையில் இந்த பூச்சிகள் அதிகமான முட்டைகள் இடும்.

மே மாதத்தில் 10-ஆக இருக்கும் செம்பேன்கள், ஜுன் மாதத்துக்குள் 1,000 செம்பேன்களாக பெருகி, ஜுலை மாதத்தில் ஒரு லட்சம் அளவுக்கு பெருகிவிடும்.

இதனை டைகோபால் 2.50 மி, 1 லிட்டர் பென்பைராக்ஸிமேட், சல்பர் ஆகியவை கட்டுப்படுத்தும் திறன் கொண்டவை. மேலும், இதுகுறித்து வேளாண் ஆலோசகரிடம் ஆலோசனைப் பெற்று விவசாயிகள் பயன் பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

## களியக்காவிளை அருகே மரியகிரி கல்லூரியில் அலங்கார மீன் வளர்ப்பு பயிற்சி முகாம்

களியக்காவிளை அருகேயுள்ள மரியகிரி மலங்கரை கத்தோலிக்க கல்லூரியில் அலங்கார மீன் வளர்ப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

கல்லூரி ஆராய்ச்சி மையம் சார்பில் நடைபெற்ற இம்முகாமுக்கு, பேராசிரியர் லிப்டன் தலைமை வகித்தார். கல்லூரித் தாளாளர் ஜோஸ் பிரைட், கல்லூரி முதல்வர் டிசையர் ஆகியோர் பேசினர். அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் அதன் மூலம் வருமானம் ஈட்டுதல் குறித்து பறக்கை மீன் வளர்ப்புத் துறை தலைவர் எஸ். டேவிட் கிங்ஸ்டன் விளக்கினார். இப்பயிற்சி முகாமில், கண்ணாடி தொட்டிகள் செய்யும் முறைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில், மார்த்தாண்டம் மறைமாவட்டத்துக்கு உள்பட்ட மிட்ஸ் சுயஉதவிக்குழு பெண்களும், கல்லூரி மாணவர்களும் பங்கேற்றனர்.

## குமரி மாவட்டத்தில் முந்திரி சீசன் தொடக்கம்: விலை கிலோவுக்கு ரூ. 25 வரை உயர்வு

குமரி மாவட்டத்தில் முந்திரி சீசன் தொடங்கியுள்ள நிலையில், முந்திரிக் கொட்டைகளின் விலை கிலோவிற்கு ரூ. 25 வரை அதிகரித்துள்ளது.

இம்மாவட்டத்தில் கடந்த 20 ஆண்டுளுக்கு முன்பு வரை பரவலாக அனைத்துப் பகுதிகளிலும் முந்திரி மரங்கள் காணப்பட்டன. மாவட்டத்தின் மேற்குப் பகுதிகளில் ரப்பர் மரங்களின் நடவு

காரணமாகவும், கிழக்குப் பகுதிகளில் வீட்டுமனை விற்பனை தொழிலாலும் முந்திரி மரங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டன.

எனினும் ஆங்காங்கே முந்திரி மரங்கள் தப்பிப் பிழைத்து நிற்கின்றன. இதில் குறிப்பாக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளையொட்டிய மலைப் பகுதிகளில் காணி குடியிருப்புகளில் குறிப்பிட்ட அளவில் முந்திரி மரங்கள் உள்ளன.

தற்போது முந்திரிப் பழங்களுக்கான சீசன் தொடங்கியுள்ள நிலையில் மக்கள் முந்திரிக் கொட்டைகளை சேகரித்து சந்தைகளில் விற்பனை செய்து வருகின்றனர். தற்போது உலர்ந்த முந்திரிக் கொட்டைகளுக்கு கடந்த ஆண்டுகளில் இல்லாத வகையில் விலையில் ரூ. 25 வரை அதிகரித்து கிலோவிற்கு ரூ. 75 முதல் 100 வரை கொள்முதல் செய்யப்படுகிறது.

இறக்குமதி வரியால் விலை அதிகரிப்பு: இதுகுறித்து குலசேகரத்தில் மலை பொருள் வணிகம் செய்யும் தங்கராஜ் கூறியதாவது: தற்போது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முந்திரிக் கொட்டைகளுக்கு மத்திய அரசு 9.36 சதம் வரி விதித்துள்ள நிலையில், உள்நாட்டில் முந்திரிக் கொட்டைகளின் விலை அதிகரித்துள்ளது.

இதனால் கடந்த ஆண்டு சராசரியாக கிலோ ரூ. 70-க்கு விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட முந்திரிக் கொட்டைகள், தற்போது கிலோ ரூ. 100 வரை விலை உயர்வை கண்டுள்ளது என்றார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 'எல் - நினோ'வால் மீன்வளம்:குறைகிறது: நாசா தகவல்

வாஷிங்டன்:'எல் - நினோ' எனப்படும், பசிபிக் பெருங்கடலில் ஏற்படும், பருவநிலை மாறுபாடால், மீன்வளம் குறைந்து வருவதாக, 'நாசா' நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

பருவநிலை மாறுபாடால், பசிபிக் பெருங்கடலில், தட்பவெப்பநிலை உயர்ந்து, கடல் நீர் சூடாகிறது. இதனால், தரைப்பகுதியிலும், பருவ காலங்களிலும் ஏற்படும் பாதிப்பு, 'எல் - நினோ' என்றழைக்கப்படுகிறது.இந்த பருவநிலை மாறுபாடு, உலகெங்கும் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. பனிமலைகள் உருகுவது, பருவம் தவறி மழைப் பெய்வது, வறட்சி, வெள்ளம் ஏற்படுவதும் இந்த, 'எல் - நினோ'வின் தாக்கத்தால்தான்.இந்த, 'எல் - நினோ' தாக்கத்தால், தெற்கு அமெரிக்காவின் வடக்கு கடலோரப் பகுதிகளில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து, அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான, நாசா ஆய்வு செய்தது.சாட்டிலைட் அனுப்பும் படங்களில், இந்த கடல் பிராந்தியத்தில் உள்ள நிற மாற்றங்களை வைத்து, இந்த ஆய்வு செய்யப்பட்டது.

நீல நிறம், கடலையும், பச்சை நிறம், அக்கடலில் உள்ள மீன்களுக்கான உணவுகளையும் குறிப்பிடுகிறது. தற்போதைய ஆய்வில், இந்த பச்சை நிறம் குறைந்து வருவது தெரிய

வந்துள்ளது.

### ஒட்டகத்தின்தகவமைப்பு

வெயிலையும், வெப்பத்தையும் எதிர்கொள்ள கோடைகாலத்தில் நம் உடல் மாற்றம் பெறுகிறது. ஆண்டு முழுவதும் வெப்பமாக இருக்கும்

பாலைவனப்பகுதியில் வாழும் ஒட்டகங்கள் தகவமைப்பினை மரபணுவிலேயே பெற்றுவிடுகின்றன.மனிதர்களின் உடல்நிலை 2 முதல் 3 செல்சியஸ் வேறுபாடுகளை தான் தாங்கும். ஆனால் ஒட்டகம் 7 செல்சியஸ் வெப்பஉயர்வையும் தாங்கும். ஒட்டகங்கள் பொதுவாக வியர்வையை வெளியிடுவதில்லை. நீரில்லாத போது தன் சிறுநீரையும் பெருமளவில் குறைக்கும். ஒட்டகத்தின் தடித்த தோல் வெப்ப தடுப்பானாக பயன்படுகிறது. பல நாட்கள் கூட நீரில்லாமல்சமாளிக்க அதன் திமில் உதவுகிறது.

**மஞ்சள் வரத்து அதிகரிப்பு: சீரான விலையில் விற்பனை**

ஈரோடு: நீண்ட விடுமுறைக்குப்பின் நேற்று நடந்த ஏலத்துக்கு மஞ்சள் வரத்து அதிகரித்தது. சீரான விலையால் வியாபாரம் மும்முரமாக நடந்தது.

ஈரோட்டில், கடந்த 21ம் தேதிக்குப்பின் உள்ளூர் பண்டிகை, ஆண்டு கணக்கு முடிப்பு போன்ற காரணத்தால், மஞ்சள் ஏலக்கூடங்களில் விடுமுறை விடுக்கப்பட்டது. 13 நாட்களுக்குப்பின், நேற்று முன்தினம் மீண்டும் மஞ்சள் ஏலம் நடந்தது. பெருந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், குவிண்டால் விரலி, 8,867 முதல், 9,929 ரூபாய் வரையிலும், கிழங்கு, 8,414 முதல், 9,399 வரையிலும், ஈரோடு ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், விரலி, 8,414 முதல், 10,077 வரையிலும், கிழங்கு, 8,214 முதல், 9,239 வரையிலும், ஈரோடு சொசைட்டியில் விரலி, 8,985 முதல், 9,709 வரையிலும், கிழங்கு, 8,574 முதல், 9,312 வரையிலும், கோபி சொசைட்டியில் விரலி, 7,699 முதல், 9,929 வரையிலும், கிழங்கு, 6,104 முதல், 9,259 ரூபாய் வரையிலுமான விலையில் விற்பனையானது. பெருந்துறைக்கு வழக்கமாக, 1,200 மூட்டை வரை மஞ்சள் வரத்தாகும். நேற்று, 1,800க்கும் மேற்பட்ட மூட்டை வரத்தாகி, 1,604 மூட்டைகள் விற்றன. தாமதமாக வந்த, 500க்கும் மேற்பட்ட மூட்டைகள், இன்று ஏலத்துக்கு வைக்கப்படுகிறது. இதேபோல அனைத்து ஏலக்கூடங்களிலும் வரத்து அதிகரித்தது. இருப்பினும், விலை சீராக இருந்தால், விற்பனை அதிகமாக நடந்தது. வரும் நாட்களிலும் மஞ்சள் வரத்து அதிகரிப்பதுடன், விலையும் உயர வாய்ப்புள்ளதாக, வியாபாரிகள் கூறினர்.

## ஒரு செடியில் இரு வண்ண மலர்கள்

கூடலூர்: கூடலூர் சாலை ஓரத்தில், ஒரே செடியில், இரு வண்ணங்களில், பூத்துள்ள மலர்கள், சுற்றுலா பயணிகளை கவர்ந்துள்ளது.

கூடலூர் மற்றும் முதுமலை புலிகள் காப்பகம் பகுதிகளில், கோடை வறட்சியில், காடுகளிலும், சாலை ஓரங்களில், இயற்கையாக பூக்கும் மலர்கள், சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகிறது. இதில், சில பூக்கள், பார்பவர்கள் மனதை மயக்க செய்கிறது.தற்போது, கூடலூர் மரப்பாலம் பகுதியில், சாலை ஓரத்தில் ஒரே செடியில், மல்லிகை பூ போன்ற வடிவில், இரு வண்ணங்களில், கொத்து கொத்தாய் பூக்கள் பூத்துள்ளன. இந்த பூக்கள், உள்ளூர் மக்களை மட்டுமின்றி, அவ்வழியாக செல்லும் கேரளா உள்ளிட்ட, வெளி மாநில சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்து வருகிறது.

## முயல் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம்

பந்தலுார்:பந்தலுார் அருகே, சேரம்பாடியில் முயல் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நீலகிரியில் பிரதான தொழிலாக உள்ள தேயிலை விவசாயம் தற்போது மந்தநிலையில் உள்ளது. பசுந்தேயிலைக்கு உரிய விலை இல்லாத காரணத்தால், சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.இதனை எதிர்கொள்ள, தேயிலைக்கு மத்தியில், ஊடுபயிராக மலை காய்கறிகள்; குறுமிளகு, காபி விவசாயத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். வேறு சில விவசாயிகள், முயல், கோழி, ஆடு ஆகியவற்றை வளர்த்து வருமானம் பார்க்கின்றனர்.இதில்,சேரம்பாடி நாயக்கன் சோலை பகுதியை சேர்ந்த விவசாயி தியாகராஜ் என்பவர், பல்வேறு பறவைகள்; முயல் ஆகியவற்றை வளர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார்.வெள்ளை நிறத்தில் காணப்படும் முயல்கள், ஆண்டுக்கு, நான்கு முறை குட்டிகள் ஈன்று வருகின்றன.இவற்றுக்கு உணவாக, காலையில் சோறு, புற்கள், தண்ணீர், மாலையில், கோதுமை மாவு கஞ்சி, தழைகள் உணவாக வழங்கப்படுகிறது. தற்போது ஒரு கிலோ எடை கொண்ட முயல், 150

ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. தியாகராஜ் கூறுகையில்,“ விவசாயம் பாதித்துள்ள நிலையில், தற்போது முயல் வளர்ப்பு நல்ல பயன் தருகிறது. நேரடியாக வந்து பலரும் முயலை வாங்கி செல்கின்றனர். இதற்கு அரசு மானியம் கொடுத்து, முயல் வளர்ப்பை ஊக்குவித்தால், பலரும் பயனடைய வாப்புள்ளது,”என்றார்.

## வறட்சியிலும் வண்ணமயம் மனங்களை இதமாக்கும் மலர்கள்

கூடலுார்:முதுமலையில், பூத்துள்ள மயில்கொன்றை மலர்கள், சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகின்றன.

முதுமலை புலிகள் காப்பகத்தில், தற்போது கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால், வனங்கள், பசுமை இழந்து காணப்படுகிறது. வனவிலங்குகள், உணவுக்கு சிரமப்பட்டு வருகின்றன.

இங்கு வரும், சுற்றுலா பயணிகள், வனத்தின் வறட்சியின் சூழலை கண்டு, விலங்குகளை பார்க்க முடியாமல், ஏமாற்றத்துடன் செல்கின்றனர்.இந்நிலையில், தெப்பக்காடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள, மரங்களில் பூத்துள்ள மயில்கொன்றை மலர்கள், உள்ளூர் மக்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் ஆறுதல் அளிப்பதாக உள்ளது.இந்த மலர் குறித்து, தாவர ஆய்வாளர் டாக்டர் ராஜன் கூறியதாவது:'டிலோனிக்ஸ் ரெகியா', என்ற தாவரவியல் பெயர் கொண்ட, இந்த மரத்தின் பூக்களை, 'மயில் கொன்றை' என்று அழைக்கின்றனர். ஆதிவாசிகள், 'சுஜில் மரம்' என்கின்றனர். வறட்சியான கோடை காலத்தில், மரங்களில் இலை உதிர்ந்து, பூக்கள் மட்டுமே காணப்படும். இதன் அழகு, அனைவரையும் கவர்ந்து வருகிறது. ஆங்கிலேயர் காலத்தில், கோடை காலத்தில், சாலையில் பயணிப்பவர்களை மகிழ்விப்பதற்காக, இத்தகைய மரங்கள் அதிகளவில் வளர்க்கப்பட்டன. தற்போது, இதன் எண்ணிக்கை குறைந்து வருகிறது. வனத்துறையினர் இந்த மர நாற்றுக்களை வளர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், மலைப்பகுதி சாலைகளிலும், இதனை அதிகளவில் நடவு செய்ய வேண்டும். இவ்வாறு, ராஜன் கூறினார்.

## குறைந்தபட்ச விலை தேயிலை வாரியம்

கோத்தகிரி:'நீலகிரியில் ஏப்ரல் மாதத்துக்கான பசுந்தேயிலை குறைந்தப்பட்ச விலை, 14.50 ரூபாய்' என, நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நீலகிரி மாவட்டம் முழுவதும், தேயிலை விவசாயிகள் வினியோகிக்கும் பசுந்தேயிலை ஒரு கிலோவுக்கு, 14.50 ரூபாய் குறையாமல் விலை வழங்கவேண்டும்.தேயிலை தொழிற்சாலைகள்; ஏஜென்ட்கள் குறிபிட்ட விலை வழங்குகின்றனரா என்பதை, தேயிலை வாரிய கள அலுவலர்கள், வளர்ச்சி அலுவலர்கள், தொழிற்சாலை ஆலோசனை அலுவலர்கள் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.நிர்ணயித்த விலையைவிட, குறைவாக விலை வழங்கப்படும் பட்சத்தில், சிறு விவசாயிகள், தேயிலை வாரியத்தில் புகார் தெரிவித்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு, அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## திண்டுக்கல்லில் பழங்களின் விலை அதிகரிப்பு விற்பனையால் வியாபாரிகள் மகிழ்ச்சி

திண்டுக்கல்: திண்டுக்கல்லில், கோடை வெயிலால் பழங்களின் விலை அதிகரித்து இருந்தாலும், விற்பனை குறையாததால் வியாபாரிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

திண்டுக்கல்லில் கோடை வெயில் வாட்டி வதைப்பதால், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரின் பார்வையும் குளிர்பானங்கள், பழங்களின் மீது திரும்பியுள்ளது. இதனால் அவற்றின் விலையும் உயர்ந்துள்ளது.

கோடையில் வாடிக்கையாளர் அதிகரிப்பால், சாலைகளை ஆக்கிரமிக்கும் வகையில் பழக்கடைகள், ஜுஸ் கடைகளின் எண்ணிக்கையும் நாள்தோறும் அதிகரித்தபடி உள்ளன. வெளியிடங்களுக்குச் செல்வோர் வெயிலின் தாக்கத்தை தணிக்க ஜுஸ், பழக்கடைகளுக்குள் அடைக்கலமாகின்றனர்.

இவர்களுக்காக திடீர் கடைகளில் கரும்புச் சாறு ரூ.15, தர்ப்பூசணி ஜூஸ் ரூ.15, பப்பாளி துண்டுகள் ரூ.10, பதநீர் ரூ.14, நுங்கு ரூ.6, மோர் ரூ.5 க்கு விற்கப்படுகிறது.

வெயிலின் தாக்கத்தால் பழங்களின் சாகுபடி குறைந்து விலை அதிகரித்துள்ளது. நேற்று ஒரு கிலோ கிரீன் ஆப்பிள் ரூ.210, ஆஸி., பேரிக்காய் ரூ.120, ஆஸி., ஆரஞ்ச் ரூ.90, சைனா பேரிக்காய்ரூ.90, ஆப்பிள் ரூ.140,காபூல் மாதுளை ரூ.120,மாதுளை ரூ.80, அவக்கோடா ரூ.90, நாக்பூர் ஆரஞ்சு ரூ.90, சாத்துக்குடி ரூ.60,திராட்சை ரூ.60, கொய்யா ரூ.40, முலாம்பழம் ரூ.30, மோரீஸ் வாழைப்பழம் ரூ.28,பெங்களூரு தர்ப்பூசணி ரூ.12, பப்பாளி ரூ.18 க்கும் விற்பனையானது.

விலை அதிகமாக இருந்தாலும், வெயிலை சமாளிக்க பழங்களையும் மக்கள் அதிகம் வாங்கி வருகின்றனர். இதனால், வியாபாரிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

வியாபாரி ஒருவர் கூறுகையில்,'வெயிலால், பழங்கள், ஜூஸ் விற்பனை அதிகரித்து எங்களுக்கு லாபம் கிடைக்கிறது', என்றார்.

**மரக்கன்றுகளுக்கு நீர் ஊற்றும் பணி**

கம்பம்: சாலையோர மரங்கள் மற்றும் மரக்கன்றுகள் வாடாமல் தடுக்க இரவு நேரங்களில் தண்ணீர் ஊற்றும் பணியை ஆலிழை பசுமை இயக்கத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

ராயப்பன்பட்டியை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் ஆலிழை பசுமை இயக்கம் இதுவரை ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளை நட்டு பாதுகாத்து வளர்த்து வருகிறது.

உத்தமபாளையம் கோகிலாபுரம் ரோடு, கம்பம் காமயகவுண்டன்பட்டி ரோடு, எரசை ரோடு, ராயப்பன்பட்டி காமயகவுண்டன்பட்டி ரோடு உள்ளிட்ட பல பகுதிகளில் ரோட்டின் ஓரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதற்கு தண்ணீர் ஊற்ற கம்பம் கிரீன்வேலி ரோட்டரி கிளப் டாங்கர் லாரி வாங்கித் தந்துள்ளனர்.

கடும் வெப்பத்தால் மரங்கள், மரக்கன்றுகள் வாடி வருகின்றன.

இவற்றை காப்பாற்ற ஆலிழை பசுமை இயக்கம் சார்பில் டாங்கர் லாரியில் தண்ணீரை நிரப்பி கடந்த சில நாட்களாக இரவு 9 மணி முதல் நள்ளிரவு 1 மணி வரை தண்ணீர் பாய்ச்சும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். இதில் இயக்க நிர்வாகி மணிமாறன், பிரகாஷ் உள்ளிட்டோர் ஈடுபட்டு வருகின்றனர்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு அதிகரிப்பு

பெரியகுளம்: பெரியகுளம் பகுதியில் நவதானிய விவசாய பரப்பு அதிகரித்துள்ளதால் நாட்டுக்கோழி வளர்ப்பு அதிகரித்து வருகிறது.

பெரியகுளம் மற்றும் ஒன்றியப் பகுதிகளில் மானாவரி நிலங்களில் கம்பு, சோளம், சாமை, குதிரைவாலி உட்பட பலவகையான நவதானிங்களை பயிர் செய்யப்படுகிறது.

தற்போது நவதானியம் பயன்பாடு வரவேற்பு பெற்றுள்ளது. விவசாயிகள், விவசாயத்துடன் நாட்டுகோழி வளர்ப்பை இணைத்தொழிலாக செய்து வருகின்றனர். தாமரைக்குளம், டி.கள்ளிப்பட்டி, கைலாசபட்டி, சருத்துப்பட்டி உட்பட பல உட்கடை கிராமப்பகுதிகளில் நாட்டுக்கோழி அதிக எண்ணிக்கையில் வளர்க்கப்படுகிறது. இங்கிருந்து நாட்டுக்கோழிகள் பெரியகுளம், தேனி, ஆண்டிபட்டி, கம்பம், போடி சந்தைகள் மற்றும் கோழி கடைகளில் விற்கப்பட்டு வருகிறது.

## சுற்றுலாப்பயணிகளை கவர்ந்த மலர் கண்காட்சி

கூடலூர்: தேக்கடி மலர் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள பல்வேறு நாடுகளின் ஏராளமான புதியவகை மலர்கள், சுற்றுலாப்பயணிகளை வெகுவாகக் கவர்ந்தன.

தேக்கடியில் கோடை காலத்தில் நடைபெறும் 10ம் ஆண்டு மலர் கண்காட்சி ஏப். 2ல் துவங்கியது.

கேரள தோட்டக்கலைத் துறையினரால் நடத்தப்படும் இக்கண்காட்சியில், நூற்றுக்கணக்கான புதிய வகை மலர் செடிகள் இடம் பெற்றுள்ளன.

தாய்லாந்து நாட்டில் இருந்து மெலஸ்டோமியா, பிட்டோனியா, செலூசியா , ஆப்பிரிக்காவில் இருந்து மேரிகோல்ட் ஆகிய மலர் வகைகளும், கொலம்பியாவில் இருந்து பெப்பினோ பழச்செடி வகைகளும் இடம் பெற்றுள் ளன.

இக்கண்காட்சி ஏப்.,15 வரை நடைபெறும். சிறுவர்களுக்கான பொழுது போக்கு அம்சங்கள், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன. தினமும் மாலையில் கருத்தரங்கு நடைபெறு கிறது.

பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிந்து கோடை விடுமுறை துவங்கி உள்ளதால் தமிழகப்பகுதியில் இருந்து சுற்றுலா பயணிகள் அதிகம் வரத்துவங்கியுள்ளனர். வெளிநாட்டு மலர்கள் அவர்களை வெகுவாக கவர்ந்துள்ளது. நுழைவுக்கட்டணம் தலா ரூ. 30 வசூலிக்கப்படுகிறது.

## மாடி தோட்டத்தில் மூலிகை செடிகள் வளர்த்து சாதிக்கும் சகோதரிகள்

கீழக்கரை: மாடித்தோட்டத்தில் அழகுக்காக வளர்க்கப்படும் குரோட்டன்ஸ் ரக செடிகளுடன், மூலிகை குணம் வாய்ந்த செடிகளை வளர்த்து சகோதரிகள் 2 பேர் சாதித்து வருகின்றனர்

கீழக்கரை வடக்குத்தெருவை சேர்ந்த சகோதரிகள் ராணி சித்தி ரகுமான் கனி, 42, முகம்மது பாத்திமா, 38. இவர்கள் இருவரும் ஒரே வீட்டில் வசித்து வருகின்றனர். வீட்டின் மொட்டை மாடியில் 150 தொட்டிகளில் பல வகையான மலர் செடிகள், கொடிகள் நன்கு செழித்து வளர்ந்து அப்பகுதியை பசுமையாகவும், குளிர்ச்சியாகவும் வைத்துள்ளது. மருதானி, கருவேப்பில்லை, எலுமிச்சை, வெற்றிலை, துளசி, கண்டங்கத்தரிக்காய், துõதுவளை, ஆடுதொடா, நெல்லிக்காய் உள்ளிட்ட மருத்துவ குணம் நிறைந்த செடிகளுடன், தக்காளி, கத்திரி, ரோஜா, வாடாமல்லி, சுருள்வாழை, மலைப்பிரதேசங்களில் வளரும் அரியவகை செடிகளும் பயிரிட்டுள்ளனர். இதற்காக வீட்டு மாடியில் 24க்கு 25 அடி அகலத்தில் மாடித்தோட்டம் அமைத்துள்ளனர்.

மாடிதோட்டம் குறித்து சகோதரிகள் கூறியதாவது: மாடித்தோட்டம் அமைப்பது தொடர்பாக நாளிதழ்களில் படித்ததன் விளைவாக நாமும் உருவாக்கலாம் என்ற எண்ணத்தில் இதனை அமைத்துள்ளோம்.

மூலிகைச்செடிகளுடன், மலர்செடிகளையும் தொட்டியில் இட்டு வளர்ப்பதால், மாடிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. தற்போது நிலவும் கோடை வெயிலால் வீடு குளுமையாக உள்ளது. செடிகளுக்கு போதுமான நீர் விட்டு பராமரிக்கிறோம். இயற்கை உரங்களை மட்டுமே இடுகிறோம். காலை நேரங்களில் வரும் தேனிக்கள், வண்ணத்துப்பூச்சி, தேன்சிட்டு, சிறு பறவைகள் இவற்றில் வந்து உலாவருகிறது. அவற்றினை காணும் போது மனதிற்கு நிம்மதியளிக்கிறது. வீட்டு வேலைகள் செய்தது போக மீதியுள்ள நேரங்களில் வீணாக பொழுதை கழிக்காமல் நாமும் பயனுள்ளதாக முயற்சிக்க மாடித்தோட்டத்தினை தேர்வு செய்தோம். எங்களிடம் இலவசமாக செடிகளையும், ஆலோசனைகளையும் இப்பகுதிமக்கள் பெற்று செல்கின்றனர். வீட்டுத்தேவைக்கான காய்கறிகளை பயிரிட்டு தேவையை பூர்த்தி செய்கிறோம், குடும்பத்தலைவிகளும் இதுபோன்று முயற்சிக்கலாம், என்றனர்.

## ஒவ்வொரு தோட்டமுமே சொல்கிறதே...

"ஒவ்வொரு தோட்டத்திற்கும் ஒவ்வொரு விதம் பிரச்னை இருக்கும். நாங்கள் உயிர்எழுச்சி வேளாண் முறையை கடைபிடிக்கிறோம்," என்கிறார், சென்னை மா விவசாயி முரளி.

சிறந்த மா விவசாயி என, முதன்முறையாக இயற்கை விவசாயியான முரளிக்கு விருது கிடைத்துள்ளது பெருமை. சென்னையைச் சேர்ந்த முரளி புள்ளியியல் பட்டதாரி. பங்குதாரர் ஹரிசேதுராமன் ஐ.ஐ.டி.,யில் சிவில் இன்ஜினியராக பணியாற்றியவர்.

இருவரும் இணைந்து மதுராந்தகத்தில் இருந்து 12 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பொன்னம்மையில் 62 ஏக்கரில் கூட்டு விவசாயம் செய்கின்றனர். ரசாயன விஷம் கலக்காத உணவை தருவது தான் விவசாயத்தின் தர்மம் என, தங்களது அனுபவத்தை விளக்கினர். இருபதாண்டுகளுக்கு முன் தோன்றிய சிந்தனை இது. உணவில் விஷம் கலப்பது தர்மமா. பாலில் ஒரு துளி விஷம் கலந்து கொடுத்தால் ஏற்றுக் கொள்வீர்களா. நிறைய விளைச்சல் வரும் என்று விஷத்தை சேர்ப்பது நியாயம் கிடையாது. இருபதாண்டுகளுக்கு முன் தோட்டத்தை

ஒருங்கிணைக்கவில்லை. எந்தெந்த ஊர்களில் என்னென்ன விசேஷம் என பார்த்து தேடி அலைந்தோம்.

ஊர் ஊராக சென்று அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசந்த் ரக மரக்கன்றுகளை வாங்கி நட்டோம்.

அல்போன்சா ரகம் மே மாதத்துடன் முடிந்து விடும். பங்கனபள்ளி, இமாம்பசந்த் ரகங்கள் ஏப்., கடைசியில் சீசன் ஆரம்பிக்கும். ஜூனில் பழங்கள் கிடைக்கும். ஜூன் 10க்குபின் ருமானி வரும். நீலம் ரகத்தில் உள்ளுக்குள் வண்டு இருக்கும் என்பதால் தவிர்த்து விட்டோம். 62 ஏக்கரில் 5300 மாமரங்கள், 300 சப்போட்டா மரம், 100 தென்னை மரங்கள் உள்ளன.

பஞ்சகவ்யம் தயாரிக்க இளநீர் தேவைப்படுவதால் தென்னை மரங்கள் வைத்துள்ளோம். தேவைப்பட்டால் உயிர்பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்துவோம். போதிய வெளிச்சமின்மை, காற்றோட்டம், மண் தன்மை காரணமாக தான் 'கல்யாண வீட்டில் விருந்து சாப்பிடுவது போல' பூச்சிகள் வந்து தொந்தரவு செய்யும். வெளிச்சமும், காற்றோட்டமும் இருந்தால் பூச்சி தொந்தரவு குறைவாகவே இருக்கும். 11 மாடுகள் உள்ளன. கன்றுக்குட்டிகள் தான் பாலை குடிக்கும். நாங்கள் கறப்பதில்லை. தோட்டத்தில் களை எடுப்பதில்லை. மாடுகளை அவ்வப்போது நிழலில் இடம் மாற்றி கட்டி வைத்தால் களையாக வளர்ந்திருக்கும் புற்களை சாப்பிடும்.

கடந்தாண்டு மழையால் மரங்கள் பூக்கவே இல்லை. இந்தாண்டு பருவம் தப்பிவிட்டது. பூஞ்சானம், பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். தட்பவெப்பநிலையை கட்டுப்படுத்த முடியாது. இந்தாண்டு உற்பத்தி குறைவு தான்.

மாம்பழங்களை பறித்து 10 நிமிடம் தண்ணீரில் ஊற வைத்து அதன்பின் துடைத்து விற்போம். சென்னையில் வந்து வாங்குபவர்களுக்கு பழமாக கொடுப்போம்.

டில்லி, மும்பை, கோல்கட்டாவிற்கு காயாக அனுப்புவோம். முயற்சி தான் முக்கியம்.

இயற்கை விவசாயம் எல்லோரும் செய்யலாம் தான். ஆனால் விற்பனை முயற்சியை துவங்குவது தான் முக்கியம். மண்டியில் கொட்டினால்

கழுதையும், குதிரையும் ஒரே விலைதான் போகும். விவசாய அறிவோடு தொழில்நுட்ப அறிவும் தானாக வந்து விடும். இதை சொல்லி தருவதற்கு ஆளில்லை. நிறைய பேரை கவனித்து தான் முன்னேற வேண்டும், என்றனர். இவர்களிடம் பேச 93806 91203.
**- எம்.எம்.ஜெயலெட்சுமி, மதுரை.**

## இது மாடி விவசாயம்!

நிலம் வைத்திருப்பவர்கள் தான் விவசாயிகள் என்பதில்லை. வீட்டு மாடியில் கூட தோட்டம் அமைத்து விவசாயம் செய்யலாம்; ஒருங்கிணைந்த பண்ணையம் அமைக்கலாம்.
காளான் வளர்ப்பு, அசோலா வளர்ப்பு, ஆடு, மாடு வளர்ப்பை இணைத்து பண்ணை திட்ட மாதிரியை உருவாக்கலாம். இதை செயல்படுத்துவதற்கு 20க்கு 16 அடி அளவு காளான் குடில், இரண்டு சிமென்ட் தொட்டிகள், இரண்டு இளம் ஆடுகள், நான்கு கோழிகள், மாடியில் செடி வளர்க்க தேவையான பைகள், நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் தேவைப்படும். காளான் குடிலின் ஈரப்பதத்தை தக்கவைக்க நாள் ஒன்றுக்கு 40 - 50 லிட்டர் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

இதில் 15 லிட்டர் தண்ணீரை சுழற்சி முறையில் மீண்டும் பெற்று செடிகளுக்கு பாய்ச்சலாம். சிறிதளவு சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களை ஆட்டுச்சாணத்துடன் கலந்து அசோலா வளர்க்கலாம். அதை அறுவடை செய்து ஆடு, கோழிகளுக்கு தீவனமாக தரலாம். செடிகளுக்கு உரமாகவும் பயன்படுத்தலாம். அசோலாவை தீவனத்துடன் கலந்து ஆட்டுக்கு தருகிறேன். கோழிகளில் இருந்து முட்டை, இறைச்சி பெறலாம். ஆயிரம் சதுர அடி இடமிருந்தால் மாடியை ஒருங்கிணைந்த பண்ணை தோட்டமாக மாற்றலாம்.
**-எஸ்.ராஜேந்திரன், தாவரவியல் பேராசிரியர், மதுரை சரஸ்வதி நாராயணன் கல்லூரி 94439 98480.**

**சித்திரை உழவு... பத்தரை மாற்று தங்கம்!**

சித்திரை உழவு... பத்தரை மாற்று தங்கம் என்பது பழமொழி. ஏப்., மே மாதங்களில் 15 சதவீத கோடை மழை கிடைக்கிறது. மழை பெய்யும் போது நிலத்தின் சரிவிற்கு குறுக்காக 25க்கு 30 செ.மீ., உழவு செய்யும் போது மழைநீர் வழிந்தோடாமல் நிலத்திலேயே சேமிக்கப்படுகிறது. இதனால் மண் அரிமானம் தடுக்கப்பட்டு வளமான மேல் மண் பாதுகாக்கப்படுகிறது. கோடை உழவு செய்வதால் மண்ணின் மேற்பரப்பில் மழைநீர் சேமிக்கப்படுகிறது. போதுமான காற்றோட்டம் கிடைப்பதால் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. மண்ணில் உள்ள ரசாயன உரம், பூச்சிமருந்துகள் சிதைக்கப்படுகிறது. அடுத்த பயிர் சாகுபடிக்கு ஊட்டச்சத்துகள் கிடைப்பது எளிதாகிறது. கோடை உழவால் புழு, பூச்சிகள், கிருமிகள் மற்றும் களைசெடிகளும் அழிக்கப்படுகிறது. **-பே.இந்திராகாந்தி, வேளாண் துணை இயக்குனர், மூ.சரஸ்வதி, த.வளர்மதி, உதவி இயக்குனர்கள், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், மதுரை.**

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## திருமூர்த்தி அணையில் இருந்து 3வது சுற்று பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு

உடுமலை: பிஏபி முதல் மண்டல பாசனத்தில் 3வது சுற்றுக்கு திருமூர்த்தி அணையில் இருந்து நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது.உடுமலை அருகே உள்ள திருமூர்த்தி அணையின் மூலம் திருப்பூர்,கோவை மாவட்டங்களில் 3.75 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. அந்த நிலங்கள் 4 மண்டலமாக பிரிக்கப்பட்டு சுழற்சி அடிப்படையில் தண்ணீர் திறக்கப்படுகிறது. தற்போது முதல் மண்டலத்தில் 94ஆயிரம் ஏக்கருக்கு பாசனம் நடக்கிறது. கடந்த பிப்ரவரி மாதம் 6ம் தேதி முதல் சுற்று

தண்ணீர் திறக்கப்பட்டது. 17 நாட்கள் திறப்புக்கு பின் முதல் சுற்று முடிந்தது.

அடுத்து துவங்கிய 2வது சுற்று தண்ணீர் கடந்த மாதம் 23ம் தேதி நிறுத்தப்பட்டது. இந்நிலையில் 3வது சுற்று தண்ணீரை விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். அவர்கள் எதிர்பார்ப்பின்படி நேற்று காலையில் அணையில் இருந்து பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது. பிரதான கால்வாயில் இருந்து உடுமலை கால்வாய்க்கு இன்று(புதன்கிழமை) தண்ணீர் திறக்கப்படுகிறது. மொத்தம் 15 நாட்களுக்கு 163 கனஅடி தண்ணீர் திறக்கப்படும். இதன்மூலம் 25ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இந்த பகுதியில் தென்னை, மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளன தற்போது அணையின் நீர்மட்டம்50 அடியாக உள்ளது.அணைக்கு நீர்வரத்து 800 கனஅடியாக உள்ளது. அணையிலிருந்து 950 கனஅடிவெளியேற்றப்படுகிறது.

## நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்ப செயல்விளக்கம்

அரியலூர் : காசான்கோட்டையில் நிலக்கடலையில் வயல் தினவிழா நடைப்பெற்றது.இதில் விவசாயிகளுக்கு நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்ப செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் திரளான விவசாயிகள் பங்கேற்றனர். தா.பழூர் ஒன்றியம் காசாங்கோட்டை கிராமத்தில் கிரீடு வேளாண் அறிவியல் மையம், சோழமாதேவி மூலம் நிலக்கடலையில் வயல்தின விழா கொண்டாடப்பட்டது. வேளாண் அறிவியல் மைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர்.அழகுகண்ணன் தலைமை வகித்தார்.

கோட்டக்கலை வல்லுனர் ராஜா ஜோஸ்லின் மற்றும் வேளாண் விரிவாக்கம் வல்லுனர் ராஜ்கலா ஆகியோர் வயல்தின விழாவில் கலந்து கொண்டு விவசாயிகளின் அனுபவத்தை கேட்டறிந்தார். பின்னர் வேளாண் அறிவியல் மையக்கின் முதல்நிலை செயல்விளக்கத் திட்டத்தின் மூலம் இயந்திரத்தினை பயன்படுத்தி நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பம் ரபி பருவத்தில் காசாங்கோட்டை கிராமத்தில் 10

விவசாயிகளை தேர்வு செய்து ஒவ்வொரு விவசாயிக்கும் இயந்திரம் கொண்டு விதை விதைக்தல், களை கருவி வழங்கி, களை எடுக்தல், நிலக்கடலை பிரித்தெடுக்கும் கருவி கொண்டு நிலக்கடலை பிரித்தெடுத்தல் ஆகிய செயல்விளக்கங்கள் செய்து காண்பித்தனர். விழாவில் அனுபவப்பட்ட விவசாயிகள் அசோகன், விஜயகுமார், ரமேஷ் ஆகியோர் தெரிவித்தாவது நாங்கள் இயந்திரம் கொண்டு விதை விதைத்தலின் மூலம் ஒரு ஏக்கருக்கு விதைப்பதற்கு ஆகும் செலவில் ரூ.10 ஆயிரம் குறைந்துள்ளது. மேலும் நிலக்கடலை பிரித்தெடுக்கும் கருவி கொண்டு நிலக்கடலை பிரித்தெடுத்தல் மூலம் ஆள் கூலியாக தரப்படும் 3 முதல் 4 மூட்டை கடலை அதாவது 150 முதல் 200 கிலோ கடலை மகசூலாககிடைக்கிறது.

மேலும் இந்த முறையை பின்பற்றி நிலக்கடலை சாகுபடியில் ஒரு ஏக்கருக்கு 2 ஆயிரம் கிலோ மகசூல் பெற்றதாகவும் மற்றும் சாகுபடி செலவு குறைந்துள்ளதாகவும் கூறினர். விழாவில் தா.பழூர் வட்டார வேளாண் துறையை சார்ந்த அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் சகாதேவன் மற்றும் காசாங்கோட்டை கிராமத்தை சார்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் விவசாயி அசோகன் நன்றி கூறினார்.

## கோடை கால தேவை அதிகரிப்பு எலுமிச்சை விலை எகிறியது விவசாயிகள் மகிழ்ச்சி

புதுக்கோட்டை : கோடை காலத்தில் எலுமிச்சை பழங்களின் தேவை அதிகரித்துள்ளதால் அதன் விலையும் எகிறியுள்ளது. இதனால் புதுகை மாவட்ட எலுமிச்சை பயிரிடும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் நெல், கடலை மற்றும் கரும்பு, முந்திரி உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில் பயரிட்டாலும் இதற்கு அடுத்தபடியாக எழுமிச்சை பயிரிடப்படுகிறது. குறிப்பாக கீரமங்கலம், வல்லத்திராகோட்டை, வம்பன், வடகாடு, மாங்காடு, கொத்தமங்கலம், கறம்பக்குடி உள்ளிட்ட இடங்களில் தனிப்பட்ட இடத்திலும், தென்னந்தோப்புகளில் ஊடு பயிராகவும் சுமார் 1,000 ஏக்கரில் எழுமிச்சை சாகுபடி செய்யப்படுகிறது.

மேலும் சிலர் வீட்டு பகுதியில் எலுமிச்சை பயிரிட்டு வருகின்றனர். இப்பகுதிகளில் விளையும் எலுமிச்சை பழங்கள் கொத்தமங்கலம், கீரமங்கலம் உள்ளிட்ட இடங்களில் உள்ள தனியார் மண்டிகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு பிற மாவட்டங்களில் விற்பனை செய்யப்படுகிறது. எலுமிச்சை பழம் பல்வேறு மருத்துவ குணம் கொண்டது என்பது அனைவரும் தெரிந்த ஒன்று. தற்போது கோடை வெயில் கொளுத்தி வருவதால் குளிர்ச்சியை ஏற்படுத்த எலுமிச்சை ஜூஸ் குடித்தால் வெப்ப தாக்கம் குறையும். இது மட்டுமட்டுமில்லாமல் ஊறுகாய் போட பயன்படுத்தப்படுகிறது. மேலும் கோயில்களில் பக்தர்கள் சாமிக்கு படைக்கும் எலுமிச்சை பழ மாலை மற்றும் எலுமிச்சையில் விளக்கு போடுவது உள்ளிட்ட பல்வேறு வழிகளில் கோயில்களில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த சில மாதங்களாக ஒரு கிலோ பழம் சுமார் ரூ.20 வரை கொள்முதல் செய்யப்பட்டு வந்துள்ளது. தற்போது, வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் பழம் கிலோ சுமார் ரூ.60க்கு கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து எலுமிச்சை பழ வியாபாரிகள் கூறியதாவது: எலுமிச்சை பழங்கள் குளிர் பானங்கள், ஊறுகாய் தயாரிக்கவும், சோப்பு உள்ளிட்டவற்றுக்கு தேவையான பவுடர் தயாரிக்கவும் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

ஏக்கரில் மாதம் சுமார் 500 கிலோ பழம் விளைகிறது. தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதாலும், கோயில்களில் திருவிழா தொடங்கியுள்ளதாலும் எலுமிச்சம்பழங்களின் தேவை அதிகரித்துள்ளது. மேலும் சில ஊறுகாய் கம்பெனிகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த சில மாதங்களாக எலுமிச்சை பழம் கிலோ ரூ.20க்கு விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது கிலோ ரூ.60 ஆக உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வினால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேலும் அரசு எலுமிச்சை பழம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தேவையான கிடங்குகள் அமைக்க உதவிகளை செய்ய வேண்டும். இந்த விவசாயத்தில் இழப்பீடு ஏற்படும் போது முதலீடு செய்த பணம்

கிடைக்கும் வகையில் மானியம் மற்றும் காப்பீடு வழங்க வேண்டும் என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கேரளாவில் இருந்து கோவைக்கு மாம்பழம் வரத்து தொடங்கியது கிலோ ரூ.75 முதல் ரூ.120 வரை விற்பனை**



கோவை,

கேரளாவில் இருந்து கோவைக்கு மாம்பழம் வரத்து தொடங்கியது. கிலோ ரூ.75 முதல் ரூ.120 வரை விற்பனையாகிறது.

மாம்பழம் சீசன்

தமிழகத்தின் அண்டை மாநிலமான கேரளாவில், தற்போது மாம்பழ சீசன் தொடங்கி உள்ளது. அங்கு அறுவடையாகும் மாம்பழ ரகங்கள், லாரிகள்

மூலமாக கோவைக்கு விற்பனைக்கு வரத்தொடங்கி உள்ளது. இதனால் கோவையில் மார்க்கெட்டுகளில் மாம்பழங்கள் குவியல், குவியலாக வைத்து விற்கப்படுகின்றன. பல இடங்களில் மாம்பழ கடைகள் வைக்கப்பட்டு உள்ளன.

கோவையில் கடந்த சில வாரங்களாக கடும் வெயில் வாட்டி வதைப்பதால், பழச்சாறு விற்பனை சூடு பிடித்துள்ளது. இதனால் பழ ரகங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்தநிலையில் கேரளாவின் மாம்பழ வரத்து வியாபாரிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பொதுமக்களும் ஆர்வமுடன் மாம்பழங்களை வாங்கி செல்கிறார்கள்.

<u>விலை நிலவரம்</u>

கோவையின் முக்கிய சந்தையாக விளங்கும், தியாகி குமரன் மார்க்கெட்டில் நேற்று விற்பனையான மாம்பழ ரகங்களின் விலை விவரம் வருமாறு:–

செந்தூரம் மாம்பழம் கிலோ ரூ.75–க்கும், அல்போன்சா மாம்பழம் கிலோ ரூ.120–க்கும், மல்கோவாமாம்பழம் கிலோ ரூ.120–க்கும், பங்கனபள்ளி மாம்பழம் கிலோ ரூ.100–க்கும் விற்பனையாகிறது.

மற்ற பழ ரகங்களை பொறுத்தவரை, மாதுளம் கிலோ ரூ.100 முதல் ரூ.120 வரையிலும், இத்தாலி ஆப்பிள் கிலோ ரூ.160–க்கும், பியூஜி ஆப்பிள் 140–க்கும், இந்தியன் ஆப்பிள் கிலோ ரூ.150–க்கும், பன்னீர் திராட்சை கிலோ 100–க்கும், ஆரஞ்சு கிலோ ரூ.80–க்கும், சாத்துக்குடி கிலோ ரூ.60–க்கும், நெல்லிக்காய் கிலோ ரூ.60–க்கும், எலுமிச்சை கிலோ ரூ.90–க்கும் முலாம்பழம் கிலோ ரூ.30–க்கும், தர்பூசணி கிலோ ரூ.20–க்கும் விற்பனையானது.

<u>வெயிலின் தாக்கம்</u>

இது தொடர்பாக பழ வியாபாரி ஒருவர் கூறும்போது, ‘தற்போது கடும் வெயிலின் தாக்கத்தால், பழங்கள் விரைவில் வாடிவிடுகின்றன. இதனால் விற்பனை பாதித்து உள்ளது. விற்பனை எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. சுமாராகவே இருக்கிறது. வழக்கமான விற்பனை மட்டுமே நடைபெற்று வருகிறது. தற்போது கேரளாவில் இருந்து மாம்பழ வரத்து தொடங்கி உள்ளது. நன்றாக விற்பனையாகிறது‘ என்றார்.

## சுட்டெரிக்கும் வெயிலால் கோழிகளில் வெப்ப அயற்சி ஏற்பட வாய்ப்பு ஆராய்ச்சி நிலையம் தகவல்




சுட்டெரிக்கும் வெயிலால் கோழிகளில் வெப்ப அயற்சி ஏற்பட வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஆராய்ச்சிநிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் அடுத்த 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- இன்று முதல் 3 நாட்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்று மணிக்கு 7 கி.மீ. வேகத்தில் தென்கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 104 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 78.8 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக 68 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 28 சதவீதமாகவும் இருக்கும்.

வெப்பஅயற்சி

அடுத்த 3 நாட்களுக்கு பகல் வெப்பம் 104 டிகிரி என்ற அளவில் நிலவும். இது இயல்பை விட அதிகம் என்பதால், சுட்டெரிக்கும் வெயிலால் கோழிகளில் வெப்ப அயற்சியும், வெப்ப அதிர்ச்சியும் அதிகமாக காணப்படும் வாய்ப்பு உள்ளது. கோழிகள் இவ்வெப்பத்திற்கு மயக்கம் அடையாமல் இருக்க உதவியாக, குளிர்ந்த நீர் குழாய்களில் சற்று அழுத்தத்துடன் இருக்க வேண்டும்.

குழாய்களில் அடிக்கடி நீரை அழுத்தத்துடன் வெளியேற்றுவதால், நீரின் வெப்பம் உயராமல் குளிர்ந்த நீராகவே இருக்கும். செயற்கை முறை நீர் தெளிப்பான் மூலம் நீரை தெளிப்பதும் அதிக வெப்பத்தை குறைக்க உதவும். மேலும் குடிநீரில் தாது உப்புக்கள் மற்றும் தரமான வைட்டமின் ‘சி’ கலந்து கொடுக்க வேண்டும். இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் தீவனமிட்டு பழக்குதல் வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## 20 ஆயிரம் எக்டேரை தாண்டியது கோடை நெல் சாகுபடி



தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு கோடை நெல் சாகுபடி 20 ஆயிரம் எக்டேரை தாண்டி உள்ளது.

மேட்டூர் அணை

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் தஞ்சை மாவட்டத்தில் விவசாயம், மேட்டூர் அணை நீரை நம்பியே உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறும். இதில் குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணை ஜூன் மாதம் 12-ந்தேதி திறக்கப்படும். இந்த தண்ணீர் கல்லணையை 4 நாளில் வந்தடையும். பின்னர் கல்லணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும்.

ஆனால் கடந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் ஜூன் மாதம் 12-ந்தேதி திறக்காமல் தாமதமாக அணை திறக்கப்பட்டது. இதனால் குறுவை சாகுபடி எதிர்பார்த்த அளவு நடைபெறவில்லை. குறுவை சாகுபடியும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட குறைந்த அளவில் 33 ஆயிரத்து 625 எக்டேரில் நடைபெற்றது. இதையடுத்து சம்பா சாகுபடி 1 லட்சத்து 32 ஆயிரம் எக்டேரில் நடைபெறும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் சம்பா சாகுபடியும் இலக்கை எட்டவில்லை. 1 லட்சத்து 27 ஆயிரத்து 534 எக்டேரில் நடைபெற்றது.

கோடை நெல் நடவு

தற்போது சம்பா, தாளடி சாகுபடி அறுவடை பணிகளும் முடிவடைந்து விட்டன. வழக்கமாக தஞ்சை மாவட்டத்தில் கோடை நெல் சாகுபடி குறைந்த அளவே நடைபெறும். ஆனால் கடந்த ஆண்டு வடகிழக்குப்பருவமழை அதிக அளவில் பெய்ததால் காவிரி டெல்டா பகுதியில் நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாக உயர்ந்தது. இதனால் கோடை நெல் சாகுபடியும் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் வழக்கமாக 12 முதல் 15 ஆயிரம் எக்டேர் வரை கோடைநெல் சாகுபடி நடைபெறும்.

ஆனால் தற்போது வரை தஞ்சை மாவட்டத்தில் கோடை நெல் சாகுபடி 20 ஆயிரம் எக்டேரை தாண்டி உள்ளது. இன்னும் பல்வேறு இடங்களில் கோடை நெல் நடவுப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தற்போது இந்த கோடை நெல் சாகுபடி அம்மாப்பேட்டை, பாபநாசம், கும்பகோணம், ஒரத்தநாடு போன்ற இடங்களில் அதிக அளவில் நடைபெற்றுள்ளது என வேளாண்மைத்துறை இணை இயக்குனர் ஞான ஒளி தெரிவித்தார்.

அதிக அளவில் சாகுபடி

தஞ்சை மாவட்டத்தில் குறுவை, சம்பா சாகுபடி எதிர்பார்த்த இலக்கை அடையாமல் இருந்த நிலையில் கோடை நெல் சாகுபடி அதிக அளவில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## முல்லைப்பெரியாறு அணையில் நீர்திறப்பு குறைப்பு: வைகை அணைக்கு நீர்வரத்து குறைந்தது



ஆண்டிப்பட்டி,

முல்லைப்பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டதன் எதிரொலியாக வைகை அணைக்கு வினாடிக்கு 9 கனஅடி தண்ணீர் மட்டுமே வந்து கொண்டிருக்கிறது.

<u>வைகை அணை</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முழுக்கொள்ளளவை எட்டிய நிலையில், பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. இதுதவிர ராமநாதபுரம், சிவகங்கை பகுதியின் பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக ஆற்றின் வழியாக கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் காரணமாக வைகை அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென சரிந்தது.

நீர்மட்டம் சரிந்ததை தொடர்ந்து முல்லைப்பெரியாறு அணையில் இருந்து வைகை அணைக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்காரணமாக வைகை அணையின் நீர்மட்டம் ஒரே அளவில் நிலைநிறுத்தப்பட்டு வந்தது. கடந்த மாதம் வைகை அணையின் நீர்மட்டம் 32 அடியாக சரிந்த நிலையில் பாசனத்திற்கு திறக்கப்பட்ட தண்ணீரும் நிறுத்தப்பட்டது.

<u>தண்ணீர் அளவு குறைப்பு</u>

அதன்பின்னர் வைகை அணையில் இருந்து மதுரை மாநகர் மற்றும் சேடப்பட்டி கூட்டுக்குடிநீர் தேவைக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் முல்லைப்பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் ஓரளவு வைகை அணைக்கு வந்து கொண்டிருந்ததால், அணையின் நீர்மட்டம் ஆமைவேகத்தில் உயர்ந்து 36 அடியாக மாறியது. இந்த நிலையில் முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் சரிந்ததால், அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டு தற்போது வினாடிக்கு 100 கனஅடி தண்ணீர் மட்டுமே திறக்கப்படுகிறது.

அளவு குறைக்கப்பட்ட நிலையில் வைகை அணைக்கான நீர்வரத்து நேற்றுக்காலை 6 மணி நிலவரப்படி வினாடிக்கு 9 கன அடியாக குறைந்தது. இந்த நீர்வரத்தும் இன்னும் ஓரிருநாட்களில் அடியோடு நின்றுவிடும் வாய்ப்பும் உள்ளது. இதனால் வைகை அணையின் நீர்மட்டம் மீண்டும் சரியத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாக மதுரை நகருக்கு குடிநீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்பட்டுள்ளது.

<u>சிக்கனமாக...</u>

வைகை அணையில் இருக்கும் தண்ணீரை குடிநீர் தேவைக்கு மட்டுமே சிக்கனமாக பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் வரையில் இதே நிலை நீடிக்கும் என்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று காலை 6 மணியளவில் வைகை அணையின் நீர்மட்டம் 36.61 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 9 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக மட்டும் வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர்இருப்பு 705 மில்லியன் கனஅடியாக காணப்பட்டது.